# 2B செயல்முறைப் பகுதி

## 1. வியொலெட்டா ப்ராகுஸ் (ஏழைடநவய டீசயமரள): என்ன வகையான சிக்கல்கள் பா.மொ.க ஆசிரியர்களால் எதிர்கொள்ளப்படுகின்றன் நான் இச் சிக்கல்களை எப்படிச் சுயமாக எதிர்கொள்ளலாம்?

வியொலெட்டா ப்ராகுஸ் சேர்பியாவிலிருந்து வந்தவர். பிரஞ்சு பேசும் சுவிற்சர்லாந்தில் (லவுசான், கிறிஸியர், க்ளரென்ஸ், லெய்சின், நியோசாட்டே) சேர்பியன் பா.மொ.க வில் கற்பிக்கிறார்.

பா.மொ.க ஆசிரியர்கள் பல வேறுபட்ட சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். நான் சில மிக இன்றியமையாத சிக்கல் பகுதிகளை பெயரிட்டுக்காட்டப்போகிறேன்.

பிறப்பு நாட்டு (எ.டு. பால்க்கன்ஸில்) ஆசிரியப்பயிற்சி பாடநெறியில் பெருநிலப் பரப்புகள் கடந்த (பிற நாட்டு) பணிகளை மேற்கொள்வதற்காக ஆசிரியர்களை ஏற்பாடு செய்யும் கற்கைநெறிகள் (எ.டு. சிறப்பு சமூக-பண்பாட்டு, நெறிமுறை கற்பித்தல் தகுதிகளை வழங்கும் முதுகலைப் பயிற்சிநெறித் திட்டம்) வழங்கப்படுவதில்லை. ஆகவே பா.மொ.க ஆசிரியர்கள் அறிவுறுத்தல் வகையான பா.மொ.க வையே பெரும்பாலும் எதிர்கொண்டனர், அவர்கள் புலம்பெயர் நாட்டை அடையும் வரை அது பற்றி அவர்களுக்குத் தெரிந்திருக்காது. மாற்றப்பட்ட நிறுவன மயப்பட்ட நிலைப்பாடுகளுடைய இவ்வகைக் கற்பித்தல் மற்றும் தாய் மொழி அளவிற்கு பிற மொழி கற்பிக்கப்படும் மாணவர் குழு என்பவற்றின் பின்புலத்தில், பா.மொ.க ஆசிரியர்கள் தவிர்க்க முடியாதபடி தாங்களே மாணவர்களாக ஆகுதல், முன்னேற்பாடு எதுவுமின்றி செயற்படல், புத்துருவாக்கத்தை மேற்கொள்ளல், வாண்மை விருத்தியில் ஈடுபடல் மற்றும் புதிய பண்பாட்டு மற்றும் ஆசிரியக்கலை கற்பித்தல் சூழல் என்பவற்றில் தங்களை ஈடுபடுத்தல் போன்ற அனைத்தும் அவர்கள் மேற்கொண்டு வரும் பணிக்கு இணையாக நடைபெறுபவை.

கற்பித்தற் கருவிகள், நூல்கள், பணிப்புத்தகங்கள் மற்றும் தாள்கள் அதே போல தாய்நாட்டிலிருந்து வந்த ஆசிரியக்கலை இலக்கியம் என்பன ஒரு மொழி மற்றும் ஒரு பண்பாட்டு அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டனவாகும். புதிய நாடொன்றில் பிறக்கும் புலம்பெயர் பிள்ளைகளுக்கு இவை பெரும்பாலும் போதாமையானவை ஆகவும், பெருந்தொகையானவையாகவும், மொழி அடிப்படையில் கடினமானவையாகவும், நடைமுறைச் செயற்பாடு அரிதானவையாகவும் அமைகின்றன. ஏனெனில் அவை இருமொழி அல்லது பன்மொழி அணுகுமுறையை அடிப்படையாகக் கொள்ளாதவையாகும், இருமொழி அல்லது பன்மொழிப் பயன்பாட்டுக்காக வடிவமைக்கப்பட்ட பல்வகைப்பட்ட பணித்தாள்கள் குறைவாகக் காணப்படுகின்றது. கற்பித்தற் கருவிகள் இருமொழி முறைமைக் கோட்பாடுகள், அவற்றுக்கிணையாக பிறப்பு நாட்டின் வரலாறு, நாகரிகம், இசை மற்றும் கலை என்பவற்றுடன் தொடர்புடைய பணித்தாள்களை அடிப்படையாக அவை கொண்டிருப்பது விரும்பத்தக்கதாகும்.

பா.மொ.க வின் வகுப்புகளின் நேர அட்டவணை (சுவிற்சர்லாந்தில்) ஊக்கமளிப்பதாயில்லை. வழமையான வகுப்பறை அறிவுறுத்தல்களைப் பின்பற்றி அடிக்கடி விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகளின் பின்னரும் கூட வழமையாக பா.மொ.க வகுப்புகள் இறுதியிலேயே இடம்பெறுகின்றன, சில வேளைகளில் பிற்பகல் 5 மணிக்கும் 8 மணிக்குமிடையில். குறிப்பாக இரண்டாம் நிலையில், மாணவர்கள் அனைத்திற்கும் சமூகமளித்தால் அது பெற்றோர்களின் அழுத்தமேயன்றி அவர்களின் சுயமான செயற்பாடல்ல. வகுப்பறைகளில் உறுதியான பல்வகைமை (வயது, மொழி வளங்கள், முதலியன) அதே போல் அறிவுறுத்தலில் தொடர்பின்மை (ஒரு கிழமைக்கு 02 மணித்தியாலங்கள் மாத்திரம்) என்பன ஆசிரியர்களுக்குப் பாரியதொரு சவாலை உண்டாக்குவதுடன் திட்டமிடுதலை மிகவும் கடினமாக ஆக்குகின்றது. எடுத்துக்காட்டாக, என்னுடைய முன்பள்ளி தொடக்கம் இரண்டாம் நிலை வரையான ஒரு குழுவில் (வகுப்பறை), அனைத்து வயது நிலைகளில் இருந்தும் மாணவர்கள் இருக்கின்றனர். ஆசிரியர் என்ற வகையில் கற்பிப்பது மிகச் சிரமமாகவே இருக்கிறது. ஏனெனில் நான் பல மாநிலங்களில் பல பள்ளிகளில் எல்லாப் பிரிவினருக்கும் கற்பிப்பதனால் தொடருந்திலேயே எனது பெருமளவான நேரம் செலவிடப்படுகிறது.

மரபுவழித் தன்னாட்டு மொழிக்கல்வி நிகழ்ச்சி அடிக்கடி வலுக்குறைக்கப்பட்டு வடிகட்டப்படுகின்றது என்னும் உண்மை நிலைக்கு இவ்வனைத்துச் சிக்கல்களும் பங்காற்றுகின்றன. ஒரு பன்மொழிச் சூழலில் வளரும் பல்வகைப் பண்பாட்டு வளங்களைக் கொண்ட மாணவ தலைமுறை ஒன்றுக்காக போதியளவு உள்ளடக்கத்தை அது கொண்டிருக்கவில்லை, அத்துடன் அது (வழமையான வகுப்பறைக் கற்பித்தலிலும் நேர அட்டவணையிலுமிருந்து விலகியுள்ளதால்) அமைப்பு அடிப்படையிலும் கவர்ச்சிகரமானதல்ல.

பிறப்பு நாடுகளும் புலம்பெயர் நாடுகளும் கூடியளவு ஒத்துழைப்பது இன்றியமையாதது என ஆசிரியர் என்ற வகையில் நான் கருதுகிறேன். புலம்பெயர் நாட்டுப் பிள்ளைகளின் மொழியியல் மற்றும் பண்பாட்டு அடையாளத்தினைப் பேணுதற்கு அதனையே கருத்திற் கொள்கின்ற நிறுவனமொன்றை உருவாக்க பொதுவான மதிநுட்பங்களை உருவாக்க வேண்டும். இரு நாடுகளினதும் துறை சார்ந்தவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொதுவான முயற்சியொன்றில், தற்போதுள்ள பாடவிதானம் மற்றும் பொருத்தமான கற்பித்தல் கருவிகளை உருவாக்கல் தொடர்பாக நிறுவன அடிப்படையிலான முன்னேற்றங்களையும் நெறியியல் தொடர்பான நெகிழ்வுத் தன்மையையும் அடையவேண்டும். தற்போதைய வழிகாட்டும் மாதிரியின் நிறுவன அடிப்படையிலான சீரமைப்புக்குப் பெரியதொரு தேவை இருக்கின்றது. அதிக மாற்றமடையும் இயல்பு கொண்ட பணி மற்றும் நவீன கற்பித்தல் மற்றும் ஊடகம் என்பவற்றைப் பயன்படுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். பிறப்பு நாட்டிலும் அதே போல புலம்பெயர் நாட்டிலும் காலத்துக்குக் காலம் மற்றும் நிலையான ஆசிரிய மேம்பாடு ஒரு பக்கம் நிகழ, பொதுவான திட்டக்கருக்கள் மற்றும் திறமைசார் கருத்தரங்குகள் கொண்ட கல்வித் திட்டங்களைத் தொடக்குவது மிக வேண்டியதாயுள்ளது, எ.கா ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் துறைசார் அறிஞர்களின் கருத்தரங்குகள். கூட்டுறவிற்கு சில எடுத்துக்காட்டுகள் ஏற்கனவே காணப்படுகின்றன. ஆனால் பெருமளவு முன்னோடித் திட்டங்களாகவும் மற்றும் குறைவான வடிவம் அல்லது குறைந்த கால அளவும் உடையனவாகவே காணப்படுகின்றன.

பிறப்பு நாட்டில் நடைபெற்ற ஏற்பாடுகளுக்குப் பின்னர், நான் எனது பணிசெய்யும் காலப்பகுதியில் நாட்டுமொழிக் கல்வியின் "மறைபொருள்களை" திரும்பத்திரும்பக் கண்டு பிடித்தேன். தொடர்ச்சியாகக் கற்றதுடன் கருத்தரங்குகளுக்குச் சமூகமளித்து, தாய்நாட்டிலும் சுவிற்சர்லாந்திலும் பா.மொ.கவின் வழிகாட்டற் சிக்கல்கள்பற்றி உரையாற்றியுள்ளேன்.

நான் தொடர்ச்சியாகப் படித்துக்கொண்டிருக்கிறேன். இரட்டை மொழிப் பணித்தாள்கள் மற்றும் கருவிகளை உருவாக்கி உள்ளேன். அத்துடன் நான் பா.மொ.க மற்றும் சுவிஸ் பள்ளிகளுக்கிடையில் நடைபெற்ற முன்னோடிச் செயல் திட்டங்களிலும் பங்குபற்றியுள்ளேன். பா.மொ.க நிலையான தரத்தில் அதிகப்படுத்த வேண்டும். கருத்தொருமித்து அனைத்து ஆசிரியர்களும் இணைந்து செயல்படுவது அவசியமாகும். அது ஊடகத்தில் பா.மொ.க தனது பேண்தகு தரத்தினை மிகுதிப்படுத்த எல்லா ஆசிரியர்களுடைய அணிதிரள்கையும் இந்தக் கட்டமைப்புடன் தொடர்புடைய எல்லோருடைய கூட்டுறவும் இன்றியமையாதன. பா.மொ.க அதன் சிக்கல்களும் வாய்ப்புகளும் ஊடகங்களில் அவற்றுடன் பொதுமக்களிடையே, ஆசிரியக்கலை மற்றும் பள்ளி தொடர்பான சொற்பொழிவுகளில் வலுவான முறையில் இடம்பெறுதலையும் இது உள்ளடக்கியதாகும்.

---

## 2. யெர்கஹெம் பெலே (லுநசபயாநஅ டீநடயல): மூன்று பெரும் சவால்கள்

யெர்கஹெம் பெலெ எத்தியோப்பியாவிலிருந்து வருகிறார். 1995 தொடக்கம் இலண்டனில் வாழ்கிறார். அங்கு 2001 தொடக்கம் திக்ரிணியா மொழியில் பா.மொ.க கற்பித்து வருகிறார்.

நான் 2002 இல் எத்தியோப்பிய பா.மொ.க வுக்கான ஆசிரியராகத் தொடங்கினேன். முதல் மூன்று கிழமைகளில் பின்வரும் பெரும் இடர்பாடுகள் மற்றும் பெருஞ் சிக்கல்களை நான் ஏற்கனவே எதிர்கொள்ள நேரிட்டது.

பல்வேறுபட்ட குழுக்களின் (மாணவர்கள், பெற்றோர்கள், மாநில பள்ளி முறைமையிலிருந்து வந்த ஆசிரியர்கள்) எதிர்பார்ப்புக்களை நான் எவ்வாறு எதிர்கொள்வேன்? கற்பித்தலிலிருந்தே தொடங்குதற்கு, மாணவர்களுடன் நாம் உரையாடவேண்டும், மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, ஒப்பீடுகளை பெற்றோர்களுக்கு அறிவித்தல். இது கடினமாக இருந்தது. மாணவர்களை வயதின் அடிப்படையில் குழுக்களாகப் பிரித்தல் பொருளற்றதாக இருந்தது. பல மாணவர்கள் (இளையவர்கள் கூட) வீடுகளில் பேசுகின்ற எரித்திரியன் இல் தேர்ச்சி உள்ளவர்கள், ஏனையோர் (முதியவர்கள் கூட) அவ்வாறே இல்லை. ஆகவே நாம் மாணவர்களின் முதல் மொழித் தகைமையினை அடிப்படையாகக்கொண்டு கூடிய மாணவர்களின் தேர்ச்சியின் அடிப்படையில் அகவை கட்டுப்பாடில்லாக் குழுக்களை உருவாக்க வேண்டி இருந்தது. அது மீண்டும் வேறு பிரச்சனைகளைத் தோற்றுவித்தது.

நெறிமுறை மற்றும் கற்பித்தல் முறைப்படி நான் எவ்வாறு தொடர்ந்து செயற்பட்டேன்? அகவை தொடர்பான பல்வேறுபட்ட குழுக்கள் மற்றும் அவர்களின் அகவை தொடர்புற்ற கற்றல் முறைமை பின்புலத்தில் மாணவர்களின் ஆர்வத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கு நான் மிகவும் ஆக்கமுறையாக மாற வேண்டியிருந்தது. மாணவர்களைச் செயற்படுத்துகின்ற பாரிய ஊடாட்டச் செயல் அணுகுமுறையே நமது தேவைகளை விரைவில் நிறைவடையச் செய்யும் என்பதை உணர்ந்துகொண்டேன்.

பாடநூல்கள் மற்றும் கருவிகள் தொடர்பான சவால்களுக்கு நான் எவ்வாறு முகம் கொடுத்தேன்? வெளிநாட்டு மொழியைக் கற்பிப்பதற்கு எத்தியோப்பிய கல்விப் பொறுப்பாளர்களிடமிருந்து எவ்வித கருவிகளும் கிடைக்கவில்லை. பண்பாடுகளுக்கிடையிலான தடைகளைக் கருத்திற் கொள்ள மற்றும் முறியடிக்க ஏனைய வழிமுறைகள் எதுவும் இன்றி தனியே ஒரு திட்டத்தை விருத்தி செய்வது என்பது உண்மையிலேயே மிகவும் சவாலாகவே இருந்தது. தொடக்கத்தில் நான் எத்தியோப்பிய பாடநூல்களிலேயே தங்கியிருந்தேன். எனது மாணவர்கள் மற்றும் அவர்களின் பின்னணியை நான் அறிந்து கொள்ள முடிந்தபோது இங்கிலாந்திலுள்ள நிலைமைக்கு எத்தியோப்பியாவுக்கான பாடம் பொருத்தமானதல்ல என விரைவில் உணர்ந்து கொண்டேன். ஏதாவது புதியது தேவைப்பட்டது எத்தியோப்பிய மற்றும் இங்கிலாந்தின் பண்பாட்டுக்கு இடையிலான தொடர்பைக் கருப்பொருளாகக் கொண்டதொன்று. அதன் விளைவாக, பண்பாட்டு அடையாளம் மற்றும் மதிப்பு தொடர்பாக கேள்விகளுக்கான மாணவர்களின் உணர்வை ஏற்படுத்துவதற்கு நான் உருவாக்கினேன். தொடர்ந்து "எத்தியோப்பிய மரபுகளும் பண்பாடுகளும்" என்னும் தலைப்பில் என் கருவிகளை உருவாக்கினேன். இந்த வேலை மிகவும் கடுமையான வேலை, ஏனெனில், எத்தியோப்பியாவில் வழக்கிலுள்ள கல்விக்கான மேல்-கீழ் அணுகுமுறை இங்கிலாந்தில் செயற்படாது. தற்போதுள்ள பல பாடநூல்களின் உள்ளடக்கமானது எங்களுடைய சூழ்நிலைக்குப் பொருத்தமற்றது. இதனால், நான் அடிக்கடி ஏமாற்றமடைவதுண்டு. கருவிகளுக்கான வளமாக இணையத்தில் தங்கி பயன் பெற முடிந்தமையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

---

## 3. ஹைரியே ஷேக்கீரி (ர்லசலைந ளூநநமசை): தற்போது எனக்கு மிக அழுத்தம் தரும் சிக்கல்

ஹைரியே ஷேக்கீரி கொசோவோவைச் சேர்ந்தவர். அவர் 1995 வரை சுவீடனில் வாழ்ந்தவர். றொன்பி, கரிஸ்க்ரோனா வில் அல்பானியன் பா.மொ.க வகுப்புகள் நடத்தினார். 2007 தொடக்கம் கரிஷாம் இல் அல்பானியன் பா.மொ.க வுக்குப் பொறுப்பாளரானார். பின்வரும் குறிப்பு இயல் 1B.2 இலுள்ள அவருடைய அறிக்கையின் நிறைவுரையாகும்.

எனக்கு (மற்றும் என்னுடன் பணிசெய்யும் பலருக்கும் கூட) தற்போது மிகவும் அழுத்தமான சிக்கலாக இருப்பது நாட்டு மொழிக் கல்வித்திட்டத்தில் முடிந்தளவிலான பல மாணவர்களின் பங்குபற்றலாகும். பெற்றுக்கொள்ளும் திறன்களுடன் சுவீடன் பள்ளிகளில் மாணவர்களின் வெற்றி போன்ற கடினமான செயற்பாட்டினை பா.மொ.க நிறைவேற்றுகின்றது, எப்படியெனில் ஆசிரியக் கலை ஆய்வாலேயே என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதிகரித்த ஈடுபாடு மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வின் ஊடாக இந்தத் தடையை வெற்றி பெற முடியும் என நான் மிகவும் நம்புகிறேன். சுவீடன் பாடசாலை முறைமையினுள் ஒருங்கிணைந்த பாடமாக வழங்கப்பட்டுள்ள அல்பானிய பா.மொ.க வில் பெருந்தொகையான அல்பானிய மாணவர்களின் பங்குபற்றுகை பெரும்பாலும் அதற்கேயுரிய பெற்றோர்களிலே தங்கியுள்ளது. தம் பிள்ளைகள் தாய் மொழியைக்கற்பதிலும் இந்த நிறுவனத்திலும் பெற்றோர்களின் உற்சாகமான ஆர்வத்தினால் மாணவர்கள் ஏனைய பாடங்களை எளிதில் கற்றுக்கொள்கின்றனர். அதே நேரம் அவர்கள் அவர்களுடைய இரு மொழி மற்றும் இரு பண்பாட்டு அடையாளத்தையும் வலுப்படுத்திக் கொள்கின்றனர். நாங்கள் இங்கு மொழி மற்றும் பண்பாடு விழிப்புணர்வு அடிப்படையிலான இரு மடங்கு நன்மைகளுடன் இயங்குகிறோம். தனிப்பட்ட முறையில் மாணவர்கள் தமக்குரிய தேர்ச்சி மற்றும் மதிப்புக்களை விரிவாக்குகின்றனர். இவ்வாறாக அவர்கள் தங்களை மட்டுமன்றி தங்களது குடும்பத்தையும் வளப்படுத்துவதோடு அதிக தேர்ச்சி உள்ளவராகவும் மாறுகின்றனர். இது சமூகத்துக்கும் அவர்கள் வாழும் நாட்டுக்கும், அதேபோன்று அவர்களுடைய பிறப்பு நாட்டுக்கும் நன்மை சேர்க்கிறது.

என்னுடைய இந்த அக்கறை (ஏனைய பல பா.மொ.க பயிற்சியாளர்களினாலும் பகிரப்பட்ட) பெற்றோர்களின் ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பின் ஊடாக தீர்த்துவைக்கப்படும் என நான் நம்புகிறேன்.

I

## 4. மூன்று பா.மொ.க மாணவர்களின் தன்வரலாறுகள்

குல்சான் (பெண்பிள்ளை, அகவை 8), இங்கிலாந்தில் வாழ்கிறாள் (சுலேய்ஹா தொப்ராக், அவளுடைய ஆசிரியையின் அறிக்கை)

குல்சான் (Gulcan) 2006 இல் லண்டனில் பிறந்தாள். பெற்றோர்கள் இருவரும் துருக்கியர்கள். அவளுக்கொரு அக்கா இருக்கிறாள். குல்சானிற்கு ஐந்து வயதாகவிருக்கும் போது அவர்களுடைய தந்தை குடும்பத்தை விட்டுச் சென்றுவிட்டார். தந்தையுடன் நல்ல ஆழமான உறவு இருந்ததால் அது அவளுக்குக் கடினமாக இருந்தது. அவளுடைய தாய் பல உடல் நிலை மற்றும் மனநிலை இயலாமைகளை உடைய இளம்பெண். இருப்பினும் லண்டனில் பத்து வருடங்களுக்கும் மேலாக அவள் வாழ்ந்திருந்தாலும் அவளுக்கு ஆங்கிலம் பேச இயலாது. அம்மாவுக்கு லண்டனில் எந்த உறவினர்களும் இல்லை. அப்பாவின் குடும்பத்தவர்கள் இங்கு வாழ்கின்றனர். இருப்பினும், அவர்கள் குல்சானிற்கோ அல்லது அவளது அக்காவுக்கோ எவ்வித பக்கதுணையும் வழங்கவில்லை.

குல்சானின் அம்மா தன்னுடைய மகள்மாரைக் கோடைக்கால விடுமுறைகளில் துருக்கிக்குக் கூட்டிச்செல்ல முயற்சிப்பார், அதனால் அவர்கள் அவளுடைய குடும்பத்தினரிடமிருந்து அன்பைப் பெற்றுக்கொள்வார்கள். ஆகையால் குல்சானிற்கு தன்னுடைய தாத்தா பாட்டியுடனான விடுமுறை பிடிக்கும். ஏனெனில் அவள் விரும்புவது போல எவ்வளவு நேரமும் வெளியில் விளையாடலாம். துருக்கிக்கான விமானக் கட்டணங்களை தாத்தா பாட்டி கொடுத்தார்கள். நிதி காரணங்களினால் ஏனைய விடுமுறைகளுக்கு எங்கும் போக முடிவதில்லை.

குல்சான் தனது அம்மாவினால் பா.மொ.க வுக்கு அழைத்து வரப்பட்டாள். ஏனெனில் தனது அரசபள்ளி வகுப்பில் திறன் குறைந்த சிறப்புத்துணை வேண்டுபவளாகக் கருதப்பட்டாள். தாயைப் பொறுத்தவரையில் அவள் அதிக எடையுடையவளாகவும் ஏனையவர்களை விட மெதுவாகக் கற்பவளாகவும் இருக்கும் காரணத்தினால் துன்புறுத்தப் பட்டாள். அவளுக்கு அரசபள்ளியில் சில நண்பர்கள் மாத்திரமே இருந்தனர். ஆனால் பா.மொ.க வகுப்புக்களில் பல பிள்ளைகளுடன் நன்றாகப் பழகுகிறாள்.

அவளுடைய பொழுது போக்குகளாகியன கணினி விளையாட்டுக்கள் விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல் மற்றும் சாப்பிடுதல். "லிட்டில்லஸ்ற் பெட் ஷொப் ரொயிஸ்" (Littlest Pet Shop Toys) என்னும் விளையாட்டில் பைத்தியம் பிடித்தவள்போல பல மணித்தியாலங்கள் விளையாடுவாள். மணிக்கணக்கில் இவற்றில் அக்கறை காட்டுவதனால் அவள் ஓய்வாக இருக்கும் உணர்வை வெளிப்படுத்துகின்றாள்.

ஜலின் (பெண்பிள்ளை, அகவை 10) ஜேர்மனியில் வாழ்கிறாள்

எனது பெயர் ஜலின் எனக்கு அகவை 10. தற்பொழுது நான் எனது குடும்பத்துடன் சென்டனில் வசிக்கிறேன். இது ஜேர்மனியின் மேற்குப் பகுதியிலுள்ள முன்ஸ்டரிற்கு அருகிலுள்ள ஒரு சிறிய நகரம். எனது பொழுது போக்கு பாடல், ஆடல் மற்றும் படித்தல். மேலும் திரைப்படத்துக்குப் போக எனக்கு மிகவும் விருப்பம். நான் எனது ஓய்வு நேரத்தை அயலிலுள்ள நண்பிகளுடன் செலவிடுவேன். என் நண்பர்கள் எல்லாரும் பெரும்பாலும் ஜேர்மன் மற்றும் குர்திஸ். மேலதிகமாக துருக்கி, ருஷ்யன், போலந்து, பொஸ்னியா போன்ற நாடுகளிலிருந்தும் எனக்கு சில நண்பர்கள் உளர்.

என் பெற்றோர்கள் துருக்கியின் குர்திஸ் பகுதியிலுள்ள தென்கிழக்கு அனடோலியாவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் குர்திஸ் இனக்குழுவின் ஒரு பகுதியினர். இங்கு பக்சின் என்று அழைக்கப்படும் ஒரு சிறிய கிராமத்தில் அவர்கள் வசிக்கின்றனர். அந்த கிராமம் இன்றும் உள்ளது. அது மார்டின் நகரத்திற்கருகில் உள்ளது. நாங்கள் யசிடி சமயச்சமூகத்தை சேர்ந்தவர்கள். எனக்கு 04 சகோதரர்கள் இருக்கின்றனர். ஆகையால் நான் ஒரு பெரிய குடும்பத்தில் வளர்க்கப்பட்டவள். அதனை நான் மிகவும் பாராட்டுகிறேன். சகோதரர்களாகிய நாங்கள் எப்போதுமே ஒற்றுமையாக இருப்போம். எனது குடும்பம் ஜேர்மனியில் 20 வருடங்களுக்கு மேலாக வசிக்கிறது. என்னைப் போன்று எனது சகோதரிகள் பலர் ஜேர்மனியில் பிறந்தவர்கள். நான் குர்திஸ் மற்றும் ஜேர்மன் மொழியிலேயே முதன்மையாக வளர்க்கப்பட்டேன். வீட்டில் பெற்றோருடன் குர்திஸில் பேசுவேன். எனினும் எனது சகோதரிகளுடன் ஜெர்மனில் பேசுவேன்.

பெஹார் (ஆண்பிள்ளை அகவை 17) சுவீடனில் வாழ்கிறான்

எனது பெயர் பெஹார். எனக்கு 17 வயது. நான் கொசோவோவில் பிறந்து வளர்ந்தேன். அது என் சொந்த ஊர். எனது 10வது பிறந்த நாளுக்கு 02 மாதங்களுக்கு முன்னர் சுவீடனை வந்தடைந்தேன். தற்பொழுது நான் அங்கு வசிக்கிறேன். அத்துடன் இரண்டாம் தரப் பள்ளியின் முதலாவது ஆண்டில் இணைந்துள்ளேன்.

கொசோவோவில் வாழ்க்கை சுவீடிஷ் வாழ்க்கையை விட மிகவும் வேறுபட்டது. கொசோவோவில் அதிக வறுமை இருந்தது. சுவீடனில் மிகவும் வசதியான மற்றும் சிக்கல் இல்லாத வாழ்க்கையை நாங்கள் வாழ்கின்றோம். பள்ளிகளும் இங்கு வேறுபட்டவை. சுவீடிஷ் பள்ளிகளில் இலவசமாக பகல் உணவு மற்றும் குடிபானங்களை நாங்கள் பெறுகிறோம். அதே சமயம் கோசோவோவில் ஒரு ரோலுக்கும் குடிபானங்களுக்கும் பணம் செலுத்தவேண்டும். அதுவே பெரும்பாலும் முழு உணவாகவும் அமைந்துவிடும். கொசோவாவில் நான்கு வருடங்கள் பாடசாலைக்கு சமூகமளித்துள்ளேன். நாங்கள் 46 மாணவர்கள், ஆனால் ஒரே ஒரு ஆசிரியர். இங்கு சுவீடனில் நாங்கள் 25 மாணவர்கள் மாத்திரமே, மற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறு ஆசிரியர்கள். சுவீடிஷ் மற்றும் ஆங்கில மொழியை நான் விரைவாகக் கற்றுக்கொண்டேன். நான் ஏழாம் தரத்திலிருந்து ஜேர்மனையும் கற்றுக்கொண்டிருக்கிறேன்.

எனக்கு எப்பொழுதும் கோசோவோவில் இருப்பதற்கு விருப்பம். ஆனால் எனது பெற்றோர் இங்கு இடம் பெயர்ந்து விட்டனர். நானும் அவர்களுடன் செல்லவேண்டியிருந்து. ஒருவேளை நான் பெரியவனாகி பாடசாலையிலிருந்து பட்டம் பெற்றுக்கொண்டால் கோசோவாவிற்கு வேலை செய்வதற்காக திரும்பிச் செல்லலாம். ஒரு சிறந்த வாழ்க்கையைப் பெறுவதற்காகவும் வறுமையிலிருந்து தப்புவதற்காகவும் நாங்கள் சுவீடனிற்கு வந்துள்ளோம்.

கோசோவோ பாடசாலைகளில் ஒழுக்கம் மிகவும் சிறந்தது. ஏனெனில் மாணவர்கள் தங்களின் ஆசிரியர்களை மதிப்பார்கள். இங்கு சுவீடனில் பல அகந்தையுள்ள மாணவர்கள் உள்ளனர், ஆணவம் மிக்க அவர்கள் ஆசிரியரின் சொற்கேளாதவர். செய்தி அறிக்கையின் அடிப்படையில் இங்கு வழிநடத்துதல் தரம் குறைந்து வருகிறது. கற்பித்தல் மற்றும் பாடசாலைகள் கோசோவோவில் மிகவும் சிறந்தன. ஆனால் பாடசாலைகளில் முதலிடுவதற்கு அரசிடம் போதிய பணமில்லை.

எனக்கு சொந்தமாக பிள்ளைகள் இருந்தால் அல்பானிய மொழி மற்றும் பண்பாட்டை மறக்க நான் அவர்களுக்கு ஒப்புதல் வழங்கமாட்டேன். அல்பானிய பிள்ளை கோசோவோவிற்கு சென்று அல்பானிய மொழி பேச முடியாமை இருந்தால் அது பைத்தியக்காரத்தனம் என நினைக்கிறேன். இது எனது பிள்ளைகளுக்கு நடக்க நான் அனுமதிக்கமாட்டேன்.